www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

8

Register No.

# அரையாண்டுத் தேர்வு – 2024

## தமிழ்

நேரம் : 2.30 மணி மதிப்பெண்கள் : 100

### பகுதி-I பிரிவு-1

சரியான விடையைத் தெரிவுடன் எடுத்து எழுதுக. 10x1=10

1. பறவைகள் ................ பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ)நீரில்
2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ...... காரணமாக அமைந்தது.
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ)அச்சுக்கலை ஈ) நுண்கலை
3. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .......
   அ) இ, ஈ ஆ) உ, ஊ இ) எ.ஏ ஈ) அ, ஆ
4. வானில் கரு ........ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
   அ)முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
5. நெடுமை+தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல்
   அ) நெடுநேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ)நெடுமைதேர்
6. சமையலறையில் செலவிடும் நேரம் ... செலவிடும் நேரமாகும்
   அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ)நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக
7. கல்விப் பயிற்சிக்குரிய பருவம்
   அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை
8. நம்மை ........ப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.
   அ) இகழ்வாரை ஆ)அகழ்வாரை இ) புகழ்வாரை ஈ) மகிழ்வாரை
9. பாலாடை - இச்சொல்லுக்குரிய புணர்ச்சி ..........
   அ) இயல்பு ஆ) தோன்றல்இ)திரிதல் ஈ) கெடுதல்
10. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம்
    அ)திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ)கோவை

### பிரிவு- 2

கோடிட்ட இடங்களை நிரப்புக. 5x1=5

11. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ...... என அழைக்கப்பட்டன.
12. புற உலக ஆராய்ச்சிக்கு......... கொழுகொம்பு போன்றது.
13. பின்னலாடை நகரமாக .......... விளங்குகிறது.
14. கற்றவருக்கு அழகு தருவது ......
15. எம்.ஜி.ஆருக்கு அழியாத புகழைத் தேடித் தந்த திட்டம் .......

### பிரிவு-III

பொருத்துக. 5x1=5

| | | |
|---|---|---|
| 16. சிவகாசி | - | கூவும் |
| 17. பண் | - | குட்டி ஜப்பான் |
| 18. சேவல் | - | இசை |
| 19. பானை | - | உலகம் |
| 20. வையம் | - | வனைதல் |

### பகுதி - II

அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

21. கற்றோர்க்குக் கல்வி எனத் தொடங்கும் நீதிநெறி விளக்கப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
    (அல்லது)
    'ஓடை ஆட' எனத் தொடங்கி போரா ரோடி வரையுள்ள ஓடைபாடலை அடிபிறழாமல் எழுதுக.
22. 'விலங்கொடு' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பகுதி - III பிரிவு- 1

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x2=10

23. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?
24. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?
25. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. திரு.வி.க.சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.
27. பண்பு அன்பு ஆகியவைபற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
28. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை?
29. பகத்சிங் கண்ட கனவு யாது?

## பிரிவு- 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

30. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
31. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
32. நான்காம் வேற்றுமை உணர்த்தும் பொருள்கள் யாவை?
33. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவையாவை?
34. இயல்பு புணர்ச்சிக்கு இரு எடுத்துக்காட்டுகள் தருக.
35. வல்லினம் மிகாத் தொடர்கள் இரண்டினை எழுதுக.
36. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

## பகுதி - IV

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x4=20**

37. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
38. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
39. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
40. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
41. பிரம்பினால் பொருள்கள் செய்யும் முறையைக் கூறுக.
42. மழைச்சோறு எடுத்தபின் எவ்வாறு மழை பெய்தது?
43. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?
44. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

## பகுதி - V

**எவையேனும் ஐந்து மொழிப்பயிற்சி வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

45. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) பால் .............. (குடி/பருகு) ஆ) பூ .......... (கொய்/பறி)
46. தமிழ் எண்களில் எழுதுக :
அ)உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ஆ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3
47. நிறுத்தக்குறிகளை இடுக - திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்டது
48. கலைச்சொல் எழுதுக.: அ) Talent ஆ) Vally
49. சரியான இணைச் சொற்களை இட்டு நிரப்புக (ஆடி அசைந்து வாழ்வுதாழ்வு, கல்விகேள்வி)
அ) சான்றோர் எனப்படுபவர்... களில் சிறந்தவர் ஆவர். ஆ) திருவிழாவில் யானை ... வந்தது.
50. பொருத்துக.
அ) ஆயிரங்காலத்துப் பயிர் - விரைந்து வெளியேறுதல்
ஆ) கம்பி நீட்டுதல் - நீண்டகாலமாக இருப்பது
ஆராய்ந்து பாராமல்
51. பிழைகளைத் திருத்தி எழுதுக.:
அ) பானையை உடைத்தது கண்ணன் அல்ல. ஆ) பகைவர் நீவீர் அல்லர்.

## பகுதி - VI

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3x8=24**

52. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக. (அல்லது)
ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக
53. அ) வெட்டுக்கிளியும் சருகுமானும் கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
54. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு எனும் தலைப்பில் ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com